(இ) ஆமெனில், அப்பள்ளியில் இதுவரை எத்தனை மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள்?

(ஈ) அதில் எத்தனை பேர் தேர்ச்சி பெற்றார்கள்?

(உ) தேர்ச்சி பெற்ற மாணவர்களுள் எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். தர்மபுரி மாவட்டம் ஓசூரில் பட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கான பயிற்சிப் பள்ளி 1973 ஆம் ஆண்டு துவங்கியது. பட்டதாரிகளுக்கும் பட்டதாரி அல்லாதவர்களுக்கும் பட்டுத் தொழில் சம்பந்தமாக பயிற்சி அளிக்கப்பட்டதும் அந்தப் பள்ளி 1974 ஆம் ஆண்டு முடிவில் மூடப்பட்டு விட்டது.

(இ) 25 பட்டதாரிகள்; 50 பட்டதாரி அல்லாதவர்கள்.

(ஈ) நான்கு பட்டதாரிகள் பயிற்சியின் நடுவே நின்று விட்டார்கள். மீதம் உள்ள 71 பேர்களும் தேர்ச்சி பெற்றார்கள்.

(உ) 15 பட்டதாரி அல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கும் உத்திரவு இடப்பட்டுள்ளது.

Cocoon market in Coimbatore.

*672 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to open a cocoon market near Palladam area in the State ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நடப்பு ஆண்டில் கோயம்பத்தூர் ஜில்லாவில் பட்டுப்புழு விற்பனை வசதி செய்து கொடுக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தொழில் வணிகத் துறை இயக்குநர் இதை கோவை மாவட்டத்தில் அமைக்க ஏற்பாடு செய்து வருகிறார்.

திரு. என். கே. பழனிசாமி : சார், சாதாரணமாக அதிகப் பலன் தருகின்ற, 30, 40 மடங்கு விளைச்சல் உண்டாகின்ற அம்மாதிரி இருக்கும் புழுக்களைக் கொடுக்கும் முறையில் பல்லடம் ஏரியாவில் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1975 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, பல்லடம் ஏரியாவில் பைலட் செண்டர் இருக்கிறது. இந்தக் கேள்வி, கக்கூன் மார்க்கெட் ஏற்பாடு செய்வதைப் பற்றிக் கேட்கப்பட்டிருக்கிறது. கோவை மாவட்டத்தில் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுக்க இருக்கிறார்கள்.

Incentives for raising third crop.

*673 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any incentive was given to the ryots in Thanjavur district during 1975 for the raising of third paddy crop ; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை@ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், மூன்றாம்போக விளைச்சலுக்கு எல்லா உதவிகளும் செய்யப்பட்டிருக்கிறது, நெல் உற்பத்தி செய்ய. ஆனால் இந்த நெல்லை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக பூராவும் நிலக்கடலை போட்டிருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் செலவு செய்வது வீண்தானே? அவர்களுக்குக் கொடுத்த சலுகைகள் வாபஸ் வாங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஏற்கெனவே நான் விடையில் சொல்லியபடி மூன்றாவது போகத்திற்கு நெல்லுக்கு மட்டும் இந்த உதவி அளிக்கப்படுகிறது. நெல்லைத் தவிர வேறு பயிர்களுக்கு சலுகைகளைக் காட்டியிருந்தால் அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வருமானால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த உதவித் தொகை வழங்குவதில் காலதாமதம் காட்டப்படுகிறது என்று விவசாயிகள் மத்தியில் சொல்லப்படுகிறது. இதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, விடையில் உதவித் தொகையைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த பட்ஜெட் உரையிலேயே மூன்றாவது போகத்திற்கு லெவியிலிருந்து விதிவிலக்கு வரும் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது மேற்கொண்டு சில வசதிகள்

@ 109-110ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.